ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1724/1 - 2011 සැප්තැම්බර් 19 වැනි සඳුදා - 2011.09.19

*1724/1 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 94/47*(III).

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6 (2) (ஆ) மற்றும் 21 (2) (ஆ) ஆகிய பிரிவுகளின் கீழான கட்டளை*

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 6 (2) (ஆ) மற்றும் பிரிவு 21 (2) (ஆ) என்பவற்றினால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வாழ்வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகிய நான், இக்கட்டளையின் மூலம் -

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்படும் காணி இடப்பரப்பு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்திற்காக நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாதல் வேண்டும் என்பதுடன் "மொறப்பே சிறீ கத்தரகம தேவாலய புனித இடப்பரப்பு" என அழைக்கப்படுதல் வேண்டுமென்றும் வெளிப்படுத்துகின்றேன்; அத்துடன்

(ஆ) "மொறப்பே சிறீ கத்தரகம தேவாலய புனித இடப்பரப்பு" என வெளிப்படுத்தப்பட்ட முழு இடப்பரப்புக்காகவும் உருவரைப் பௌதீக வரைபடமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென்று பணிக்கின்றேன்.

விமல் வீரவன்ச,
நிர்மாண, பொறியியல் சேவைகள்,
வீடமைப்பு மற்றும் பொது வாழ்வசதிகள் அமைச்சர்.

நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும்
பொது வாழ்வசதிகள் அமைச்சு,
கொழும்பு,
2011,செத்தெம்பர் 01.

**கவனிக்க**.- 1723/1 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானித் தொடரின் இறுதி இல.1723/ 35 ஆகும்.

***அட்டவணை***

மொறப்பே சிறீ கத்தரகம தேவாலய புனித இடப்பரப்பைக் கொண்டுள்ள இடப்பரப்பு

*மத்திய மாகாணத்திலுள்ள நுவரேலியா நிர்வாக மாவட்டத்தில் கொத்மலே பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பள்ளேபான கோறளையின் சிறு பிரிவிலுள்ள மொறப்பே கிராமத்தில் அமைந்துள்ளதும், 2010, யூலை 28 ஆந் திகதிய என்யூ/கேரீஎம்/2010/75 ஆம் இலக்க நிலஅளவையாளர் தலைமையதிபதியின் சுவடெடுப்பின் மூலம் காட்டப்பட்டதும், பரப்பளவில் 0.6450 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுமான காணி இடப்பரப்பு ; அதன் எல்லைகள் பின்வருமாறு:-*

*வடக்கு :* நீர்த்தேக்கங்களுக்கான காட்டு ஒதுக்கு ;

*கிழக்கு :* மாவெலவிலிருந்து முன்னோக்கிச் செல்லும் பிரதான வீதி ;

*தெற்கு :* றம்புக்பத்தளை கால்வாய் ;

*மேற்கு :* கம்சபா வீதி.

*10- 12*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*